உ

திருவருட்பிரகாசவள்ளலார்

என்னும்

சிதம்பரம்.

இராமலிங்கப்பிள்ளை

திருவாய்மலர்ந்தருளிய

# நடராஜபதிமாலை.

இஃது.

சிதம்பரம்.

பு. வே. சுந்தரம்பிள்ளைகேட்டுக்கொண்டபடி

இஃது.

சரவணபுரம்.

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

புரசைபாக்கம்.

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

௧௮௯௫

ஐந்தாம் புத்தகம்.

என்னியலுடம்பிலேயென்பிலேயன்பிலே
யிதயத்திலே தயவிலே
என்னுயிரிலேயென்றனுயிரிக்குருயிலே
என்னியர்க்குணமதனிலே
இன்னியலென்வாக்கிலேயென்னுடையநாக்கிலே
யென்செவிப்புலநிசையிலே
யென்னிருகண்மணியிலேஎன்கண்மணியொளியிலே
யென்னனுபவந்தன்னிலே
நன்னியலென்னறிவிலேயறிவினுக்கறிவிலே
நானேகலந்துமுழுதுந்
தன்மயமதாக்கியேதித்தித்துமென்மேற்
றதும்பிநின்றகின்றவமுதே
துன்னியபெருங்கருணைவெள்ளமே
யழியாதசுகமேசுகாதீதமே
சுத்தசிவசன்மார்க்கநிதியேயருட்பெருஞ்
ஜோதிநடராஜபதியே. (௨)

உடலெலாமுயிரெலாமுணர்வெலா
முள்ளனவெலாங்கலந்தே
ஒளியமயதாக்கியிருநீக்கியெக்காலத்து
முதயாத்தமானமின்றி
இடலெலாம்வல்லசிவசத்திகிரணங்கியாய்
ஏகமாய்யேகபோக

இன்பநிலையென்னுமொருசிற்சபையினடுவே
யிலங்கிநிறைகின்றசுடரே
கடலெலாம்புவியெலாகனலெலாம்வளியெலாங்
ககனெலாங்கண்டபரமே
காணுதபொருளெனக்கலையெலாம்புகலென்
கண்காணவந்தபொருளே
தொடலெலாம்பெறவெனுக்குள்ளும்புறத்தும்
மெய்த்துணையாய்விளங்குமறிவே
சுத்தசிவசன்மார்க்கநிதியேயருட்பெருஞ்
ஜோதிநடராஜபதியே (௮)

மெய்தழையருள்ளங்குளிர்ந்துவகைமாறாது
மென்மேற்கலந்துபொங்க
விச்சையறிவோங்கவென்னிச்சையறிவனுபவம்
விளங்கவறிவறிவதாகி
உய்தழைவளர்ந்ததெலாம்வல்லசித்ததுதந்
துவட்டாதுளூறியூறி
யூற்றெழுந்தென்னையுந்தானாக்கியென்னுள்ளே
உள்ளபடியுள்ளவமுதே
கைதழையவந்தவான்கனியேயெலாங்கண்ட
கண்ணேகலந்தநடுவே
கற்றனைதோங்குசிற்சபாமணியே
கணப்பிருங்கருணைநிறைவே
துய்தழைக்கப்பித்தழைத்தரிவேயருட்
சுகபோகயோகவுருவே

சுத்தசிவசன்மார்க்கநிதியேயருட்பெருஞ்
ஜோதிநடராஜபதியே (௪)

எண்ணிலாவண்டபகிரண்டத்தின்முதலிலே
யிடையிலேகடையிலேமேல்
ஏற்றத்திலேயவையுளூற்றத்திலே
யெய்துவடிவந்தன்னிலே
கண்ணுருவருவிலேயுருவிலேகுருவிலே
கருவிலேதண்மைதனிலே
கலையாதிநிலையிலேசந்திசத்தாகிக்
கலந்தோங்குகின்றபொருளே
தெண்ணிலாக்காந்தமணிமேடைவாய்க்
கேடைவாய்ச்சேர்ந்தனுபவித்தசுகமே
சித்தெலாஞ்செயவல்லதெய்வமேஎன்மனத்
திருமாளிகைதீபமே
துண்ணுறுச்சாந்தசிவஞானிகளுளத்தே
சுதந்தரித்தெளிசெய்யொளியே
சுத்தசிவசன்மார்க்கநிதியேயருட்பெருஞ்
ஜோதிநடராஜபதியே (௫)

அம்புவியிலேபுவியினடியிலேமுடியிலே
யம்மண்டலந்தன்னிலே
பகிலத்திலேபுவியினகிலத்திலேவைக்
கானவடிவாகிதனிலே
விம்பமுறவேநிறைந்தாங்கவைநிகழ்ந்திட
விளக்குமவையவையாகியே

மேலுகவையாகியவையவையலாதவொரு
மெய்ந்நிலையுமானபொருளே
தம்பமிசையெனையேற்றியமுதூற்றியழியாத்
தலத்திலுறவைத்தவரசே
சாகாதவித்தைக்கிலக்கணமிலக்கியந்
தானாயிருந்தபரமே
தொம்பதமுமுடனுற்றதற்பதமுமசிபதச்
சுகமுமொன்றானசிவமே
சுத்தசிவசன்மார்கநிதியேயருட்பெருஞ்
ஜோதிநடராஜபதியே (௬)

நீரிலேநீருற்றநிறையிலேநிறையுற்ற
நிலையிலேநுண்மைதனிலே
நிகழ்விலேநிகழ்வுற்றநிகழ்விலேநிழலிலே
நெகிழிலேதண்மைதனிலே
ஊரிலேயந்நீரினுப்பிலேயுப்பினுறு
மொன்சுவையிலேதிரையிலே
யுற்றநீர்க்கீழிலேமேலிலேநடுவிலே
யுற்றியலுருத்துமொளியே
நாரிலேயொருகோடிபொழியினுந்துணைபெறாக்
கருணைமழைபொழிமேகமே
கனகசபைநடுநின்றகடவுளேசிற்சபைக்
கண்ணோங்குமொருதெய்வமே
தூரிலேபலமளித்தூயுலேவளர்கின்ற
சுகசொருபமானதருவே

சுத்தசிவசன்மார்க்கநிதியேயருட்பெருஞ்
ஜோதிநடராஜபதியே. (எ)

ஒள்ளியநெருப்பிலேயுப்பிலேயொப்பிலா
வொளியிலேசுடரிலெல்லமே
லோட்டிலேகூட்டிலேயுள்ளாடுமாட்டிலே
யுறுமாதியந்தத்திலே
தெள்ளியநிறத்திலேயருவத்திலேயெலாஞ்
செயவல்லசெய்கைதனிலே
சித்தாய்விளங்கியுபசித்தாகியசத்திகள்
சிறக்கவளர்கின்றவெளியே
வள்ளியேசிவானந்தவலையேசுகாதீத
வானமேஞானமயமே
மணியேயென்னிருகண்ணுண்மணியே
யென்னுயிரேயென்வாழ்வேயென்வாழ்வைப்பே
துள்ளுமயனப்பேயையுள்ளுறவடக்கி
மெய்ச்சுகமெனக்கீந்ததுணையே
சுத்தசிவசன்மார்க்நிதியேயருட்பெருஞ்
ஜோதிநடராஜபதியே (அ)

திருச்சிற்றம்பலம்,